(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். அருந்ததியர், ஆதி திராவிட மக்களுக்கு அரசுமூலம் கட்டப்பட்ட பழுதடைந்த சுமார் 43 ஆயிரம் வீடுகளைப் புதுப்பித்துத் தர ஆணையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அனைத்து சமுதாய பெருந்தலைவர்களையும் பெருமைப்படுத்தும் வகையிலே, வன்னிய சமூகத்தின் பெருந்தலைவர், இந்திய சுதந்திரப் போராட்ட வீரர், தமிழக முன்னாள் அமைச்சர் பெருந்தகை திரு. எஸ்.எஸ். ராமசாமி படையாச்சியார் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 16-ஐ, அரசு விழாவாகக் கொண்டாட ஆணை வழங்கிய வன்னிய சமூகத்தினரின் பாதுகாவலர், எனது அரசியல் ஆசான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2016-2018 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 31 முதல் 34 வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், என்ன சொல்லுங்கள்?*